DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Assistant Sessions Judge, Gingee

| | |
|---|---|
| Sessions | **SC Case No.42/2017** |
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court |
| Name | **PW 28.குமார்** |
| Father's Name/ Husband name | தேவராசு |
| Village | அனந்தபுரம் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969. On 03.08.2023

(A1, A3 Present, A2, A4, A5 Absent. U/S 317 Crpc petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்போது அனந்தபுரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.06.2016 ம் தேதி மாலை வளத்தி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று இரவு 8.30 மணிக்கு செஞ்சி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த சக்திவேல் த.பெ . ராமன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் இரவு 9.30 மணிக்கு வளத்தி காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 156/2016 பிரிவுகள் 147,148,448,294(b),323,324,307 IPC படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது அ.சா.ஆ.13/அ.சா.28 ஆக குறியீடு செய்யப்படுகறிது.** பின்னர் முதல் தகவல் அறிக்கையும், புகார் வாக்குமூலத்தையும் மேல்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

I. செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை காவல் நிலைய பதிவேட்டில் பதிவு செய்தேன். அதே தேதியில் இவ்வழக்கின் எதிரிகளும் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக எனக்கு தகவல் வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. எதிரி குப்பன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் வளத்தி காவல் நிலைய குற்ற எண். 157/2016 முதல் தகவல் அறிக்கை நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். **மேற்படி முதல் தகவல் அறிக்கையின் ஜெராக்ஸ் நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது எ.சா.ஆ.1/அ.சா.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவத்தின் போது முன்பக்கமாக இரண்டு பேரும், பின்பக்கமாக இரண்டு பேரும் வந்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. குப்பனும், ஞானமூர்த்தியும் ராமன் என்பவரை தோள் பட்டையில் வெட்டியதாக புகாரில் குறிப்பிடவில்லை. குப்பனும், முருகனும் வெட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

II. சாட்சி மாரியம்மாளை 5 எதிரிகளும் மரப்பட்டையால் அடித்ததாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல்தகவல் அறிக்கையும், புகாரையும் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளேன் என்றாலும், எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் காலதாமதமாக முதல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.